★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: பங்குனி 14உ செவ்வாய் (27—3—56) ★ ★ வெளியூர்: பங்குனி 15உ புதன் (28—3—56) [இதழ் 243

சேலத்தில் தண்ணீர்ப் பஞ்சம்

கடந்த 3 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட மிகப் பெரிய தண்ணீர் பஞ்சத்தைவிட இப்போது, இங்குள்ள திருச்செங்கோடு நகரத்தில் குடி தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது.

தண்ணீர் எடுத்துவருவதற்கு இங்கிருந்து வெகு தூரத்திற்கு அப்பால்வரைக்கும் நூற்றுக்கணக்கான ஆண்களும், பெண்களும் செல்கின்றனராம்.

மற்றும் சிலர் சைக்கிள்களில் தண்ணீர் எடுத்துக்கொண்டு வந்து, ஒரு குடம் குடி தண்ணீர் 1½ அணாவிற்கு விற்றுவருகின்றனராம்! குடிப்பதற்கு முடியாத தண்ணீரைக்கூட, குடம் ஒன்றுக்கு ¾ அணா வீதம் விற்கின்றனராம்.

தொழில் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் சென்னை முன்னேறி உள்ளதாம்!

பாசன ஏற்பாட்டில் சென்னைக்குத் தாராள உதவியாம்!

கைத்தறிக்கும் இதர குடிசைத் தொழில்களுக்கும் சென்னை பெற்றுள்ளது அமோகமாம்!

விந்தியப் பிரதேசம் வறண்டு கிடக்கிறதாம்! மத்தியப் பிரதேசம் மங்கிக் கிடக்கிறதாம்!

நிதிக் குழுத் தலைவர் சந்தானம் அய்யங்காரின் ஆத்ம திருப்தி

மதுரை, மார்ச் 25—

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தேவையான தொகையை சென்னைக்கு ஒதுக்கவில்லை எனக் குற்றஞ்சாட்டப்படுகிறது. சென்னையைப் பொறுத்தமட்டிலுமே அல்லாது, மற்ற மாகாணங்கள் அனைத்திலும் அவ்வாறேதான் இந்திய அரசாங்கம் நடந்துகொண்டு இருக்கிறது

"பாசன வசதி, மின்சாரப் பெருக்கம், குடிசைத் தொழிலை விரிவாக்கல் ஆகிய துறைகளில் அபிவிருத்தி செய்யும் முக்கிய நோக்கத்திற்காக மட்டுமேதான், ராஜ்யங்களுக்கு, இரண்டாவது திட்டத்தில் தொகைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. சிலர் தவறாக நினைத்துக்கொண்டு இருப்பதுபோன்று, கனரகத் தொழில்கள், நெசவாலைகள், சர்க்கரை ஆலைகள் ஆகிய பெருந் தொழில்களை நிறுவும் நோக்குடன் தொகை ஒதுக்கப்படவில்லை.

(4-ம் பக்கம் பார்க்க)

40,000 பேர் பாதிக்கப்படுவர்!

தஞ்சை, திருச்சி மாவட்டத்தில் மின்சார 'வெட்டு' எதிரொலி

ஏப்ரல் திங்கள் முதல் ஏற்படுத்தப்படவிருக்கும் 25 சத விகித மின்சார தயாரிப்பு 'வெட்டு'க் காரணமாக திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் சுமார் 40 000 பேர் வரை பாதிக்கப்படுவர் எனத் தெரிய வருகிறது.

திருச்சி மாவட்டத்தில் 'ஜிப்சம்' படிவங்கள்

பூகர்ப்ப ஆராய்ச்சியில் இடம் பெற்றுள்ளதாம்!

புதுடில்லி, மார்ச். 27—

1956-57-ல் நடத்தப்படவிருக்கும் பூகர்ப்ப ஆராய்ச்சியில் திருச்சி மாவட்டத்திலுள்ள 'ஜிப்சம்' படிவங்களும் சேர்க்கப்பட்டுள்ளதாம்.

'தமிழ் நாடு' எனப் பெயரிட முடியாதாம்!

'மதருஸ்' உலகறிந்த ஒரு பெயராகிவிட்டதாம்!

முதலமைச்சரின் மானங்கெட்ட வாதம்

சென்னை, மார்ச் 27—

"சென்னை' (மெட்ருஸ்) என்ற பெயர் நாடு முழுமைக்கு மட்டுமல்லாமல், உலகம் முழுமைக்கும் தெரிந்த ஒரு பெயராகிவிட்டது. எனவே, அப்படிப்பட்ட ஒரு பெயரை இப்போது மாற்றிவிடுவதால் எவ்வித இலாபமும் கிடையாது"

என்று, நேற்று நடைபெற்ற சென்னை சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தின்போது, ஒரு சில காங்கிரசாரால், 'சென்னை மாநிலம்' என்ற பெயரை மாற்றி, 'தமிழ் நாடு' அல்லது 'தமிழகம்' என்று அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டபோது, முதலமைச்சர் காமராசர், 'அந்தப் பெயர் மாற்றத்திற்குத் தற்போது எந்தவித அவசியமும் ஏற்பட்டு விடவில்லை,' என்று கூறி, சர்க்கார் சார்பில் விளக்கம் தந்திருக்கிறார்.

கூட்ட நடவடிக்கை இரண்டரை மணி நேரம் நடைபெற்றது என்றும், மாநிலத் திருத்த அமைப்பு மசோதா குறித்து விவாதிக்க நடந்த அந்தக் கூட்டத்தைத் துவக்கிவைத்துப் பேசிய முதலமைச்சர் காமராசர், உறுப்பினர்கள் அனைவரும் அம்மசோதாவிற்கு ஆதரவாக ஒருமுகமாகப் பேசவேண்டும் என்று கேட்டுக்கொண்டதாகவும் தெரியவருகிறது.

"மாநிலங்களைத் திருத்தி அமைப்பது குறித்தப் பிரச்சினைகள் அனைத்தும் ஏற்கனவே விவாதிக்கப்பட்டுவிட்டன; அத்துடன், மத்திய சர்க்காருக்கும் அது குறித்து, மாநில சர்க்காருடைய சிபாரிசுகளையும் தெரிவித்தாகிவிட்டது. இவைகளையெல்லாம் கருத்தில் நிறுத்திப் பார்த்து மசோதாவையும் உருவாக்கிவிட்டோம்; எனவே, மீண்டும் இப்போது இப்பிரச்சினையில் விவாதித்துக்கொண்டிருப்பது அர்த்தமற்றது; அது, முடிவு பெறாத முரண்பாடுகளில்தான் கொண்டு சேர்க்கும்; எனவே, உறுப்பினர்கள் அனைவரும் ஒருமனதாக இந்த மசோதாவை ஆதரித்து, சட்டசபையிலும் தங்கள் வாக்கைத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,"

என்று அவர் மேலும் பேசுகையில் கேட்டுக்கொண்டாராம்.

ஊரடங்குச் சட்டம்!

நிகோசியா, மார்ச் 25—

சைப்ரஸ் தீவின் விடுதலைக்குப் போராடிய மகாரியஸ் பாதிரியாரின் நாடு கடத்தலை யொட்டி எழுந்த தேசிய வாதிகளின் பயமுறுத்தல்களை முன்னிட்டு கால வரையரையின்றி, ஊரடங்குச் சட்டத்தை அமுல் நடத்தும் பொருட்டு பிரிட்டிஷ் துருப்புகள் சைப்ரசைச் சேர்ந்த 14 நகரங்களின் வீதிகளில் ரோந்து சுற்றவாரம்பித்தனராம்.

கல்லூரி மாணவரின் உடல் நிலை 'சர்வே'

சென்னை, மார்ச் 26—

கல்லூரி மாணவர்களின் உடற்கூறு அமைப்பு நிலைமைப் பற்றி விரிவான 'சர்வே' நடத்தும் பிரச்சினை பொதுத் தணிக்கைக் குழுவின் ஆலோசனையில் இருப்பதாகத் தெரிய வருகிறது.

தட்சிணப் பிரதேசக் கோட்பாடு காமராசருக்கு உடன்பாடு உடையதாம்!

அவர் ஒப்புதல் பெற்றே அது பற்றித் தாம் பேசி வருகிறாராம்!

முதலமைச்சர் குட்டை அம்பலமாக்குகிறார் நிதி அமைச்சர்

சென்னை, மார்ச். 27—

"தட்சிணப்பிரதேசப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் நான் மேற்கொண்ட ஒவ்வொரு நடவடிக்கையும் முதலமைச்சர் காமராசரின் ஒப்புதலைப் பெற்றே மேற்கொண்டேனே தவிர, அவரது ஒப்புதல் பெறாமல் எதுவும் செய்ததில்லை"

என்று நிதி அமைச்சர் சுப்பிரமணியம், நேற்று நடைபெற்ற மாநிலப் புது அமைப்பு மசோதா குறித்த விவாதக் கூட்டத்தில், 'தட்சிணப் பிரதேசப்' பிரச்சினையைப் பொறுத்தவரையில் தம்முடைய நிலை குறித்து விளக்கம் தந்திருக்கிறார்.

ரூ. 87 இலட்சத்திற்குக் கதர் வாங்கப்பட்டதாம்!

புதுடில்லி, மார்ச் 26—

1955—56-ம் ஆண்டின் முதல் 9 மாதங்களில் இந்தியப் பேரரசின் உபயோகத்திற்காக ரூ. 87 இலட்சம் மதிப்புள்ள கதர் வாங்கப்பட்டிருக்கிறதாம்.

600 பிரசவ விடுதிகள்

சென்னை மாநிலத்தில் அடுத்த ஐந்தாண்டுகளில் துவக்கப்படும்

அடுத்த ஐந்தாண்டுகளில் சென்னை மாநிலத்தில் 600 மகப்பேறு, குழந்தை பராமரிப்பு விடுதிகளைத் துவக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதென்று சென்னை சர்க்கார் சுகாதார அமைச்சர் ஏ. பி. ஷெட்டி தெரிவித்துள்ளார்.

காமராசர் ஆட்சியின் அடக்குமுறை வேகம்

ஒரு மாத சிறைத்தண்டனை முடிந்து தோழர்கள் விடுதலை

மதுரை, மார்ச் 26—

பிப். 20 பொது வேலைநிறுத்தத்தில் பங்கு கொண்ட வாலாந்தூர் தி. மு. கழகத் தோழர்கள் 15 பேர் ஒரு மாத சிறை தண்டனை முடிந்து, மதுரை மத்திய சிறையிலிருந்து, மார்ச் 20-ந் தேதி பகல் 12 மணியளவில் விடுதலையடைந்தனர்.

விடுதலையடைந்த தோழர்களை மதுரை நகர் தி. மு. கழகத் துணைச் செயலாளர் என். எஸ். இராசா, தோழர்கள் முனியப்பன், கே. எஸ். சந்தானம், அரசுக்கண்ணன், மற்றும் பலர் மலர்மாலை அணிவித்து வரவேற்றனர்.

தோழர்களுக்குச் சிற்றுண்டி அளிக்கப்பட்டபின், மாலை 3 மணிக்கு வாலாந்தூருக்கு வழியனுப்பிவைக்கப்பட்டனர்.

அபராதம் கட்ட மறுத்து சிறை சென்ற தோழர்கள் விடுதலை

பிப். 20—அர்த்தாலின்போது, கொப்பம்பட்டி, வயிரிசெட்டிப் பாளையம், காமயகவுண்டன், சோபனபுரம் ஆகிய ஊர்களிலுள்ள 69 தோழர்களைக் கைது செய்து அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

22—3—56-ல் 35 தோழர்களையும், 23—3—56-ல் 31 தோழர்களையும் முசிறி சப்-மாஜிஸ்திரேட் அவர்கள் விசாரிக்கப்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 27–3–'56 செவ்வாய்

வாழ்விலோர் வாய்ப்பு

மாகாண புனரமைப்பு மசோதா, சென்னை சட்ட சபையில் நாளை விவாதிக்கப் படப்போகிறது.

தமிழர்களின் நியாயமான விருப்பத்தை, மசோதா உள்ளடக்கியதாக இல்லை.

சட்டசபையின் ஒருமித்த முடிவை, மசோதா பிரதிபலிப்பதாக இல்லை.

தமிழ் மக்களின் நீண்டகால கோரிக்கையை அலட்சியப் படுத்திவிட்டு, ஒருதலைப்பட்சமான நீதி வழங்குவதாக இருக்கிறது மசோதா.

தமிழ் மக்களின் ஒருமனப்பட்ட கருத்து எது என்பதை, சென்னை சட்டசபை ஒருமனதாகத் தீர்மானித்து இருக்கிறது.

இக்கருத்தறிவிப்பில் அரசியல் கட்சி பேதங்களை ஒதுக்கிவிட்டு, அனைவரும் தமிழ் மக்கள் என்ற ஒரு அடிப்படையில், சென்னை சட்டசபை தமிழ் உறுப்பினர்கள் செயல்பட்டு உள்ளனர்.

கட்சி வேற்றுமை ஒழிந்து, சட்டசபை மேற்கொண்ட முடிவிற்கு இந்தியப் பேரரசு மதிப்பு வைத்து நடந்து கொண்டு இருக்க வேண்டியதே அரசியல் அறநெறியாகும்.

ஒரு சட்டசபை முடிவுக்குக் கட்டுப்பட வேண்டிய கட்டாயம், அரசியல் சட்டவிதிப்படி, இந்திய அரசாங்கத்திற்குஇல்லை எனும் வாதம் இத்துறையில் பொருந்தாது—அது நியாயத்திற்குட்பட்டதும் ஆகாது.

குறிப்பிட்ட பகுதி மக்களின் எதிர்காலத்தைப் பாதிக்கக் கூடிய ஒரு விவகாரத்தில், அம்மக்களுக்குரித்தான சட்டசபை முடிவை அலட்சியப் படுத்தி நடந்துகொள்ளுவது தான், இந்திய அரசாங்கத்தின் நீங்காக் கடமை என வரையறுத்துக் காட்டும் விதி எதுவும் அரசியல் சட்டத்தில் இடம் பெற்றிருக்கவில்லை என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

குறிப்பிட்ட விதியின் சொற்கள், அவ்விதியின் பொருளை விளக்குவதுடன் அமைந்துவிடுவதில்லை. விதியின் உணர்வு என்ற ஒரு உயர் பண்பையும் அச்சொற்கள் தம் மகத்தே மறைத்துக்கொண்டுள்ளன.

அவ்வுணர்வு உருவில் உள்ள பண்பாட்டைத்தான் ஜனநாயகப் பண்பு எனப் பகரப்படுகிறது. அப்பண்பு அறவே விலக்கப்பட்டு இருக்கிறது, மாகாண புனரமைப்பு மசோதாவில்.

மாகாண புனரமைப்பு மசோதாவில் விரிவான திருத்தங்கள் செய்யும் உரிமை சட்ட சபைக்கு அளிக்கப்பட்டு இருக்கவில்லை. சிறு சிறு திருத்தங்கள் செய்வதற்கான உரிமை தரப்பட்டு இருக்கிறது.

அதாவது, மசோதாவின் மூலக் கோட்பாடு சிதைக்கப் படாமல், சிறு திருத்தங்கள் செய்வதற்கு சட்ட சபைக்கு உரிமை தரப்பட்டு இருக்கிறது.

தமிழ் மக்களின் ஒருமித்த விருப்பத்தை, கட்சி வேற்றுமையை மறந்து, ஒருமனதாகத் தீர்மானித்தது சென்னை சட்ட சபை என முன்னர் குறிப்பிட்டோம்.

அதை ஒப்ப மறுத்து, தன் மனம்போனப் போக்கில், தமிழ் மக்களின் எதிர்கால நலத்தைப் பாதிக்கும் வகையில், புதிய மசோதாவை உருவாக்கி இருக்கிறது இந்திய அரசாங்கம்.

இந்திய அரசாங்கம் தனது கருத்தை, மசோதா உருவில் தருவதற்கு முன்பே, வெளிப்படையாகக் கூறியது.

அதுகண்டு இம்மாகாண காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசும் உரிமை பெற்றவர்கள், எதிர்த்துக் குரல் எழுப்பாமல், எப்பொழுதும்போல் ஊமைகளாக இருந்துவிட்டனர்.

எனவே, தமிழ் மக்களின் கோரிக்கையை மீண்டும் ஒரு முறை நினைவுறுத்த வேண்டிய கட்டாயம், தாங்களும் மொழி வழியில் தமிழ் மக்களாகப் பிறந்துள்ள காரணத்தால்,மற்ற அரசியல் கட்சியினருக்கும், தனிப்பட்டத் தமிழ் நல்லறிவாளர்களுக்கும் ஏற்பட்டுவிட்டது.

தமிழ் மக்களின் நியாயமான விருப்பத்தை மறுபடியும் இந்திய அரசாங்கம் அறியச் செய்வதுதான், அவர்களின் உள்ளக் கிடக்கையே அல்லாது, வேறு ஒரு அரசியல் நினைப்பும் அவர்களுக்கு அறவே கிடையாது.

அப்பெரும் புனிதமான உண்மையை கூட்டணித் தலைவரும், கூட்டணியில் இடம் பெற்றுள்ள பிற சான்றோர்களும், நாட்டு மக்களுக்கு விளக்கினதின் மூலம், ஆளும் காங்கிரஸ் கட்சியினருக்கும் அறிவித்தனர்.

காங்கிரஸ் கட்சியினர் பல்லோர், அவ்விருதயபூர்வமான உண்மையை ஒப்பினபோதிலும், காங்கிரஸ் முதலமைச்சரும், அவர் கரவு மனம் படைத்தோரும் ஒப்ப மறுத்தனர்.

கூட்டணியினரின் கோரிக்கைகள், தமக்கு உடன்பாடு உடையனவா, அல்லவா என்றஒன்றை மட்டுமே நுணுகி ஆராய்ந்து, உடன்பாடு உடையதானால் ஆதரித்தும், மாறுபாடு கொண்டதானால் எதிர்த்தும் செயல்பட வேண்டிய முதலமைச்சர், கூட்டணியைக் களங்கப்படுத்திவிட்டால், அதன் கோரிக்கைகளையும் தமிழ் மக்கள் வெறுத்து ஒதுக்கிவிடுவர் என்றத் தப்புக் கணக்குப் போட்டுக்கொண்டு, கூட்டணியைத் தூற்றத் தொடங்கினர்.

தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளென சட்டசபை மூலம் தீர்மானிக்கப்பட்டவை செயலாற்றப்பட வேண்டும் என்பதில் திடமான உறுதிப்பாடு உடைய எவரும்—அவர் காங்கிரஸ்கட்சியினராக இருந்த போதிலும்கூட—அதேகோரிக்கைகளைக் கூட்டணி கிளப்பி இருக்கிறது என்பதற்காகக் கோபங்கொள்ளவோ, ஆதரவு காட்ட மறுக்கவோ செய்யார். அது நியாயமுமாகாது—அரசியல் யூகமுமாகாது.

ஆனால், முதலமைச்சர் காமராசரோ, கோரிக்கைகளைக் கொண்டு கூட்டணியை ஆராய்வதற்குப் பதில், 'நமக்கும் திரிப்பா' என ஆத்திர வயப்பட்டு கூட்டணியின் மீது சீறிப் பாயத் தொடங்கினர்.

அந்தச் சோகத் தொடர்கதை இன்னும் முற்றுப்பெறவில்லை—அடுத்த தேர்தல்வரை அது முற்றுப்பெறப்போவதில்லை என்பதை அறிவிக்கும் வகையில் முதலமைச்சரின் செயல் இருந்து வருகிறது.

அது எப்படியோ தொலைந்து போகட்டும்! எட்டிக்கு இனிப்பு ஏது? வேம்புக்குத் தித்திப்பை ஊட்ட நம்மால் முடியுமா?

கூட்டணியின் முயற்சியால் வெற்றிகரமாக நடந்தேறிய வேலை நிறுத்தத்தால் விழிப் படைந்த இந்தியப் பிரதமர், 'தேவிகுளம் — பீர்மேட்டில் வாக்கெடுப்பு எடுக்கும் கோரிக்கை நியாயமானது'என ஒப்புக்கொண்டு, அக்கருத்தை மக்கள் சபையில் தனித்தத் தன்மையில் கூறினர். அதையே சட்ட சம்மதமுடையதாக ஏற்கும்படி இந்தியப் பிரதமரை, சென்னை முதலமைச்சர் வற்புறுத்தி இருக்கவேண்டும்.

வலியுறுத்தினரோ இல்லையோ அவர், மக்கள் சபையில் தனித்த முறையில் ஒப்பின இந்தியப் பிரதமர், 'வாக்கெடுப்பு' முறைக்கு அதிகார முத்திரை பொறிக்க மனங்கொள்ளாது இருந்துவிட்டார்.

விரிவான அதிகாரம் படைத்த இரண்டு எல்லை நிர்ணயக் குழுவுகளை, அவசியமேற்பட்டால் நியமிக்கலாம் என்ற முடிவிற்கு இந்தியப் பிரதமர் வந்திருக்கிறார். அம்முறை, மாகாண புனரமைப்பு மசோதாவில் இடம் பெற்றும் இருக்கிறது.

மசோதாவில் பெரிய திருத்தங்களைச் செய்யக்கூடாது என அரசாங்கக் கோலத்தில் தடை விதித்தும், காங்கிரஸ் உறுப்பினர்கள் மசோதாவை எதிர்த்து வாக்களிக்கக் கூடாது என கட்சி உருவில் கட்டுப்பாடு விதித்தும், காங்கிரஸ் மேலிடம் ஆணை பிறப்பித்து இருக்கிறது.

சென்னை சட்டசபையில் காங்கிரஸ் கட்சியே பெரும்பான்மை பெற்று இருக்கிறது.

மசோதாவில் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள், சேர்க்கப்படவேண்டிய சிபாரிசுகள், கோரப்பட வேண்டிய நியாயங்கள் ஆக அத்தனையும் நிறைவேற்றும் எண்ணிக்கை பலம் காங்கிரஸ் கட்சிக்கே இருக்கிறது.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், கம்யூனிஸ்டு கட்சியினராக இருந்தாலும், சோஷலிஸ்டுகளாக இருந்தாலும், திராவிட இயக்கத்தவர்களாக இருந்தாலும், தமிழரசுக் கழகச் சார்புடையவர்களாக இருந்தாலும், பிற்பட்ட வகுப்பின் பிரதிநிதிகளானாலும், அரிசன அமைப்பில் இருப்பவர்களானாலும், அவர்கள் அனைவரும மொழிவழியில் தமிழர்கள் என்பதை எவராலும் மறந்துவிடுவதற்கில்லை.

எனவே, தமிழ் மக்களின் எதிர்கால நலன்களைக் காக்கும் பொறுப்பு, சட்டசபை உறுப்பினர்களின் பொதுப் பொறுப்பாகும்.

தமிழர் நலம் தமிழராய்ப் பிறந்தோரின் பொதுச் சொத்து.

வெள்ளம் வருமுன் அணையிடுவதே அறிவுடைமை. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்வதுதான் புத்திசாலித்தனம்.

மசோதா விவாதத்தின் போது, இரண்டு திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும்.

ஆந்திராவில் இணைக்கப்பட்டுள்ள சித்தூர், நெல்லூர் வட்டங்களில் உள்ளத் தமிழ்ப் பகுதிகளை சென்னையுடன் இணைத்து வட எல்லையையும், தேவிகுளம்—பீர்மேடு, நெய்யாற்றங்கரை, கொச்சின் சித்தூர், பாலக்காடு ஆகியவற்றில் உள்ள தமிழ்ப் பகுதிகளை சென்னையுடன் இணைத்து நியாயமான எல்லையையும் வகுக்க, இரண்டு தனித்தனி எல்லைக் குழுவுகளை நியமிக்க வேண்டுமெனத் தீர்மானிக்கவேண்டும்.

சென்னைக்கு, 'தமிழ் நாடு' எனப் பெயரிடக் கோரி மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப் படவேண்டும்.

இவ்விரண்டையும் நிறைவேற்ற வேண்டிய வாய்ப்பு, இப்பொழுது சென்னை சட்ட சபைக்குக் கிடைத்து இருக்கிறது. இதைத் தவறவிடும் பட்சத்தில் இனி வாய்ப்புக் கிடைப்பது அரிது.

இந்த அரிய வாய்ப்பைத் தவறவிடாமல் சட்ட சபை உறுப்பினர்கள் உறுதியுடன் நடந்துகொள்ளுவார்கள் என நம்புகிறோம்.

சட்டசபை உறுப்பினர்களுக்கு, சட்ட சபைக்குள் நுழையும் வாய்ப்பைக் கொடுத்தவர்கள் தமிழ் மக்களேயாவர். எனவே, தமிழ் மக்களின் நலத்தைக் காக்கவேண்டிய கடமை, கட்டாயம் சட்ட சபை உறுப்பினர்களுக்கு இருக்கிறது.

சட்டசபை உறுப்பினர்களிடம் அதையே, தமிழ் மக்கள் இன்று எதிர்பார்த்துக் கிடக்கின்றனர். அவர்கள் ஏமாற்றமுறும்படி சட்டசபை உறுப்பினர்கள் செய்துவிடக் கூடாது.

மக்கள் கருத்துக்குக் கட்டுப்பட்டவன் தான் என, தட்சிணப் பிரதேச அமைப்பு விஷயத்தில் முதலமைச்சர் சொல்லிக்கொண்டு வருகிறார். தட்சிணப் பிரதேசக் கருத்தை மக்கள் விருப்பத்திற்கு மாறுகத் திணிக்கும் சர்வாதிகாரி அல்ல தான் என்றும் அவர் குரல் எழுப்பி வருகிறார்.

அவர் சொல்லைப் பரீட்சித்துப் பார்க்கக்கூடிய அரிய வாய்ப்பு, நாளை சட்டசபையில் ஏற்பட இருக்கிறது. அவ்வாய்ப்பை அவர் பயன்படுத்தி, தமிழ் மக்கள் கோரிக்கை வெற்றிபெறும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

தேவிகுளம், பீர்மேடு, கொச்சின்-சித்தூர், நெய்யாற்றங்கரை, பாலக்காடு, சித்தூர், நெல்லூர் தமிழ்ப் பகுதிகளை, சென்னையுடன் இணைக்கப்பெறுவதே தமிழ் மக்களின் ஒரு மனப்பட்டக் கருத்தாகும்.

செங்கோட்டை இரு பகுதிகளாகப் பிளக்கப்பட்டு, ஒரு பகுதி திரு-கொச்சியுடன் விடப்பட்டிருப்பதையும், தமிழ் மக்கள் விரும்பவில்லை.

இக்கருத்து, தமிழ் நாடு காங்கிரஸ் கட்சிக்கு உடன்பாடு உடையதேயாகும். இதை உள்ளடக்கமாகக் கொண்டே சென்னை சட்டசபை தீர்மானம நிறைவேற்றி இருக்கிறது.

சென்னை சட்டசபை முடிவை மக்கள் கருத்தாக ஒப்புக்கொள்ளத் தயார் என நிதி அமைச்சர் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறார். அதன்படி சட்டசபை முடிவு மக்கள் கருத்து ஆகிறது.

மக்கள் கருத்துப்படி நடக்க தயார் என முதலமைச்சர் முரசறைவிக்கிறார். எனவே, மேற்குறிப்பிட்ட தமிழ் மக்கள் கோரிக்கைகளை வெற்றிகரமாக நிறைவேற்றிவைக்கும் பொறுப்பு முதலமைச்சர் காமராசருடையதாகும்.

அக்கடமையை ஆற்றக் கூடிய வாழ்விலோர் வாய்ப்பு, நாளை, முதலமைச்சர் காமராசர் அவர்களுக்குக் கிட்டுகிறது. வாய்ப்பைப் பயன்படுத்தித் தமிழ் மக்களின் பல்லாண்டுக்குத் தம்மை நற்பாத்திரமாக்கிக் கொள்ளட்டும் முதலமைச்சர் காமராசரும், மற்ற காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களும். வாழ்க தமிழ் மக்கள்! வெல்க அவர்தம் நியாயமான விருப்பம்!

தென்னப்பிரிக்கச் சுதேசிகள்மீது

துப்பாக்கிப்பிரயோகம்

ஒருவர் கொலை; இருவர் படுகாயம்

போர்ட் எலிசபெத் (தெ. ஆ.) மார்ச் 24—

இங்குள்ள நியூ பிரைட்டன் நகரப் பகுதியில் ஏற்பட்ட ஒரு கலவரத்தை யொட்டிப் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும், அதன் விளைவாக ஒரு ஆப்பிரிக்கச் சுதேசி கொல்லப்பட்டதாகவும், மற்றும் இருவர் படுகாயமுற்றனர் என்றும் செய்திகள் அறிவிக்கின்றன.

இந்த ஆர்ப்பாட்டம் சுமார் 200-ஆப்பிரிக்கர்களால் மேற்கொள்ளப் பட்டதென்றும், முதலில் போலீஸ் லாரி ஒன்றின்மீது கல்வீசி 3-போலீசாரைக் காயப்படுத்தினர் என்றும், இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்வதற்கான காரணம் என்னவென்று இதுகாறும் தெரியவில்லை என்றும் கூறப்படுகிறது.

கல்வீச்சின்போது ஒரு ஐரோப்பியப் போலீஸ் சார்ஜெண்டுக்கு தோள்பட்டையில் பலத்த காயமேற்பட்டது என்றும், மறுபடியும் அவர் தாக்கப்பட்டதும் அவர் துப்பாக்கியால் சுட ஆரம்பித்தார் என்றும், உடனே ஆர்ப்பாட்டக்காரர்கள் அனைவரும் கலைந்து செல்ல இரண்டு பேர் காயமுற்று அவ்விடத்திலேயே விழுந்து விட்டனர் என்றும் குறிப்பு தரப்பட்டிருக்கிறது.

ஆர்ப்பாட்டத்திற்கான காரணம் குறித்துப் போலீசார் புலன் விசாரித்து வருகின்றனராம்.

இரும்புச் சத்து கலந்த நீர்!

பருத்திக்குடி கிராமத்தில் பரிசீலனை

திருவையாறு, மார்ச். 21—

திருவையாறு ஊராண்மைக் கழகத்திற்குட்பட்ட பருத்திக்குடி என்னும் சிற்றூரில், கிராம சமுதாய நல திட்டத்தின்படி ஊராண்மைக் கழக நிர்வாகத்தின் கீழ், பருத்திக்குடியின் குடிநீர் வசதிக்காக 'போரிங் பம்ப்' இறக்கப்பட்டதாம். சுமார் 30 அடி இறக்கப் பட்டதும், 'கியாஸ்' புகை முதலில் வெளிக் கிளம்பியதாம். தண்ணீர் இல்லாமற்போகவே மேலும் பூமிக்குள் 'பம்ப்' இறக்கப்பட்டதும் தெளிவற்ற நீர் வரவே, மேலும் தண்ணீர் இறைக்கப்பட்டும் நல்ல குடிநீர் கிடைக்கவில்லையாம்.

சென்னை தண்ணீர் பரிசோதனை அதிகாரி இரண்டு நாட்களாக அங்கு தங்கி, அத்தண்ணீரை சோதித்துப் பார்த்ததில் தண்ணீரில் இரும்புச் சத்து கலந்திருப்பதாய் தெரியவருகிறதாம். இந்நீரை நல்ல குடிநீராக மாற்ற மேற்கொண்டு ஆவன செய்து வருகின்றார்களாம்.

புஞ்சைப் புளியம்பட்டி தோழர்கள்மீது வழக்கு

31-3-56-ல் விசாரணை நடைபெறும்

கடந்த பிப். 20-ந் தேதி புஞ்சைப் புளியம் பட்டியில் அர்த்தாலும், கடையடைப்பும் வெற்றிகரமாகவும், அமைதியாகவும் நடைபெற்றது. குறிப்பிட்ட 3 காங்கிரஸ்காரர்களின் கடைகள் மட்டுமே திறக்கப்பட்டிருந்தது. அந்தக் கடைகளின் முன் 20-ந் தேதி காலை முதல் மாலைவரை இரண்டு இரண்டு தொண்டர்களாகச் சென்று பொதுமக்களிடம், 'இன்று சாமான் வாங்கவேண்டாம்' என்று கேட்டுக் கொண்டதற்காக மொத்தம் 63 பேர்களைக் கைது செய்தனர். இருவரை மட்டும் புஞ்சைப் புளியம்பட்டி போலீஸ் நிலையத்தில் வைத்துவிட்டு, மீதி 61 பேர்களையும் சத்தியமங்கலம் கொண்டு சென்றனர்.

அன்றிரவு 50 பேர்களை சத்தியில் விடுதலை செய்துவிட்டு, மீதி 11 பேர்களை மார்ச். 5-ந்தேதி வரை ரிமாண்டில் வைத்திருந்து, பிறகு இரு தினங்கள் கழித்து விடுதலை செய்து விட்டனர்.

மேற்படி 11 பேர்களைத் தவிர்த்து மீதி 50 பேர்களுக்கும், மார்ச் 16-ந் தேதி காலை 11 மணிக்கு சத்தியமங்கலம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஆஜராகுமாறு அவர்கள்மீது இ. பி. கோ. 290-பிரிவின்படி வழக்கு தொடர்ந்த சம்மன் வந்தது.

சம்மன் பெற்றுக்கொண்ட 32 தோழர்கள் மார்ச் 16-ந் தேதி சத்தி கோர்ட்டில் ஆஜரானுர்கள். விசாரணையின்போது, 'சம்மனில் கண்டபடி குற்றம் நாங்கள் செய்யவில்லை' யென்று தோழர்கள் மறுக்கவே, எல்லோருக்கும் மார்ச் 31-ந் தேதி வாய்தா போட்டிருக்கிறது.

வழக்கறிஞரைக்கொண்டு வழக்காடுவதென புஞ்சைப் புளியம்பட்டி சர்வகட்சிக் கூட்டணியில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

அந்தமான் தீவிற்கு தமிழர்கள் குடியேற்றம்

600 விவசாயக்குடும்பங்கள் மனு கொடுத்துள்ளதாம்

மத்திய சர்க்கார் அதிகாரி பரிசீலனைசெய்து அனுப்புவாராம்!

திருச்சி, மார்ச். 23—

அந்தமான் தீவிற்கு சென்னை மாநிலத்திலிருந்து ஆண்டுதோறும் 60 குடும்பங்கள் வீதம் ஐந்து வருடங்களுக்கு அனுப்பப்படுவார்களாம்!

இவ்வாண்டு 600 விவசாயக் குடும்பங்கள் மனு கொடுத்திருப்பதைப் பரிசீலித்து, மத்திய சர்க்கார் அதிகாரி தேர்ந்தெடுத்து அனுப்புவாராம்!

இவ்விவரங்களை திருச்சி மாவட்ட அதிகாரி, பத்திரிகையாளர் மாநாட்டில் கூறியதாகத் தெரியவருகிறது.

'தொழிலின் தந்திரத்தையே மக்கள் முதலில் கற்க வேண்டும்'

'தகுதிக்கேற்ப பணிகளைத் தேர்ந்தெடுப்பின் வாழ்வில் வெற்றிபெற இயலும்'

தஞ்சை, மார்ச் 26—

"தொழிலைக் கற்பதற்கு மாறாக தொழிலின் தந்திரத்தை மக்கள் கற்கும் வரை இந்தியாவில் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியாது; இலாபம் தருவதும், மகிழ்ச்சியை உண்டுபண்ணக்கூடியதுமான தொழிலையே அனைவரும் மேற்கொள்ள வேண்டும்.

"'டெலிபோன் ஆபரேட்டர்', ஆசிரியர், போலீஸ் போன்ற வேலைகளில் செவிடர்கள் அமரக்கூடாது. முன்கோபமுள்ளவர்கள் மருத்துவர், ஆசிரியர் போன்ற தொழிலுக்கு பொருத்தமற்றவர்கள். குடும்பத் தொல்லையிலுள்ளோர் வெளியிடங்களுக்கு முகாம்போடும் வேலையில் அமரக்கூடாது. அவரவர்கள் கல்வி, திறன், உடற்கட்டு முதலியவற்றிற்குத் தக்கபடி வேலையைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

"ஒருவர், மன உறுதியுடன் தனக்குத் தகுதி வாய்ந்த தொழில் இன்னதென அறிந்து விடா முயற்சியோடு பாடுபட்டால், அவரது எண்ணம் நிச்சயம் நிறைவேறும்!"

என்று, 22—3—56 மாலை 5 மணியளவில், தஞ்சை தூய அந்தோணியார் உயர்நிலைப்பள்ளியில், பம்பாயைச் சேர்ந்த டாக்டர் ஆர்தர் பி. பெரேரா அவர்கள் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டுள்ளார்.

அரிசனருக்கு தேநீர் தர மறுத்ததின் விளைவு

ஓட்டல் உரிமையாளருக்கு ரூ. 100 அபராதம்

அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒருவருக்குத் தனது ஓட்டலில் தேநீர் கொடுக்க மறுத்ததின் காரணமாக, அந்தக் கடை உரிமையாளருக்கு ரூ 100 அபராதம் அல்லது 15 நாள் சிறைத் தண்டனை விதித்து மத்திய பாரத் மாநில உயர் நீதிமன்ற நீதிபதிகள் உத்திரவிட்ட நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றிருக்கிறது.

இந்த நிகழ்ச்சி நடந்த 1954—ஏப்ரல் 9-ந் தேதியன்று நடந்ததாம். ஆனால், வழக்கு முதலில் உஜ்ஜெயின் மாவட்ட அடிஷனல் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாகவும், ஆனால் அந்த நீதிபதி எதிரியினுடைய ஓட்டல் எந்தவித சர்க்கார் சட்ட விதிக்கும் உட்பட்டதாக இல்லாமல் இருப்பதாகக் கருதினதால் அந்த வழக்கைத் தள்ளிவிடுவதாகக் கூறி தீர்ப்பளித்திருக்கிறார். ஆனால் சர்க்கார் வழக்கறிஞர் அவ்வழக்கை, விசாரிக்க வேண்டுமென்று வாதாடி, மாநில உயர் நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்து கொண்டதின் பேரில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாம்.

உயர் நீதிமன்ற விசாரணையின் போது, 1954 ஏப்ரல் 9-ந் தேதி, புனும்சந்த் என்ற அரிசனர் ஒருவர், பம்பால் என்பவருக்குச் சொந்தமான ஓட்டலில் நுழைந்து, தேநீர் தருமாறு கேட்டதாகவும் ஆனால் அவர் ஒரு அரிசனர் என்ற காரணங்காட்டி அவருக்கு தேநீர் வழங்க மறுக்கப்பட்டது என்றும் தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

கண்ணமங்கலம் தோழர்கள்மீது வழக்கு

17 - பேருக்கு அபராதம்

வேலூர், மார்ச் 24—

23—3—56ல், ஆரணி சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டில், கண்ணமங்கலம் தோழர்களின் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிப். 20-ல், கண்ணமங்கலம் உயர்நிலைப் பள்ளியின் முன்னுல் கூடி போக்குவரத்துக்கு தடைசெய்ததாகக் கூறி, தலா ஒரு ரூபாய் வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

தோழர்கள் அபராதம் கட்ட மறுத்துவிட்டார்கள்.

அபராதம் விதிக்கப்பட்ட தோழர்கள் :— கே. டி. அண்ணமலை, பாசா, தென்னரசன், முனுப்வேலு, காமராஜ், இராதாகிருஷ்ணன், சர்தார், ராஜு, பாலு, சுப்பிரமணி, கபார், கண்ணன், குணபூசணம், அப்துல்லா, லோகன், ஜிக்கிரியா.

என். எஸ். இளங்கோ உள்ளிட்ட 10-தோழர்கள் மீது வழக்கு

விசாரணை ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது

அதிராம்பட்டினம், மார்ச். 24-

சென்ற பிப். 20 அர்த்தாலின் போது, அதிராம் பட்டினத்தில் கைது செய்யப்பட்டத் தஞ்சை மாவட்டச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ உள்ளிட்ட பத்து தோழர்களின் மீது ஒரு வழக்கு போடப்பட்டு, நேற்று பட்டுக் கோட்டை 'ஜுடிஷியல் சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்'டில் விசாரணைக்கு வந்தது.

தோழர்கள் அனைவரும் கோர்ட்டுக்கு வந்திருந்து தாங்கள் குற்றவாளிகள் அல்லவென்று தெரிவித்துக் கொண்டனர்.

வழக்கு விசாரணைக்காக 27-3-56-ந் தேதி எடுத்துக் கொள்ளப்படும் என்று சப்-மாஜிஸ்திரேட் கூறி, தவணைப் போட்டிருக்கிறார்.

சர்க்கார் தரப்பு சாட்சிகளுக்கு 'சம்மன்'கள் அனுப்பப்பட்டிருப்பதாகவும், அவர்கள் ஐந்துபேர் விசாரிக்கப் படுவார்கள் என்றும் தெரிகிறது.

பாகிஸ்தான் குடியரசுத் தலைவர் உறுதியளிக்கிறார்!

கராச்சி, மார்ச் 25—

"இந்தியாவிற்கும்—பாகிஸ்தானுக்குமிடையே போர் நடந்துகொண்டிருப்பதானது, இரண்டு நாடுகளின் அழிவுக்கும் காரணமாகிவிடும். இந்தியாவிற்குப் பாகிஸ்தானிடமிருந்து எந்த விதமான பயமுறுத்தலும் வராது என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்"

என்று பாகிஸ்தான் குடியரசுத் தலைவர் இஸ்கந்தர் மீர்சா கூறியிருக்கிறார்.

'அரசாங்க அலுவல்களைப் பெறுவதில் அக்கரை செலுத்துவதில்லை'

'தொழில் துறையில் நாட்டம் செலுத்தி வருகின்றனர்'

பார்ப்பனர்கள் 'இடம் பெயர்ச்சி' பற்றி நிதி அமைச்சர் அறிவிப்பு

'அரசாங்க அலுவல்களை சிலர் பெற்றுவிடுவதினாலேயே பிற்பட்ட வகுப்பினர் குறை தீர்ந்துவிடாது'

சென்னை, மார்ச் 24—

"இன்றைய நாட்களில் பார்ப்பனர்கள்கூட, சர்க்கார் உத்தியோகங்கள் கிடைக்க வேண்டுமென்பதில் கவனம் செலுத்தாமல், தொழில்துறையில் ஈடுபாடு கொள்வதில் அதிக அக்கரை செலுத்தி வருகின்றனர். அப்படியிருக்க, 'தாழ்த்தப்பட்டோர் தலைவர்கள்' என்று கூறிக் கொள்வோர், சர்க்கார் துறையில் வேலைபெற வேண்டும் என்ற தங்கள் பழைய கருத்தையே இன்றும் நினைவில் கொண்டிருப்பார்களானுல், அது, தங்களைப் பின்பற்றி வரும் மக்களை தவறான பாதையில் அழைத்துச் செல்வதாக ஆகுமே தவிர, வேறில்லை. அவர்களைவிட சர்க்காரும், பின்தங்கிக் கிடக்கின்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் மிகுந்த அக்கரையும், ஆர்வமும் கொண்டிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்த குறிப்பிட்ட சிலருக்கு சர்க்கார் அலுவல்களில் இடம் கொடுத்து விடுவதினாலேயே, அந்தக் குறிப்பிட்ட வகுப்பினர் முன்னேறிவிட்டனர் என்று நினைப்பதும் தவறு,"

என்று, சென்னை மேல்(சட்ட) சபையில், நிதி அமைச்சர் சுப்பிரமணியம் குறிப்பிட்டிருக்கிறார்.

"எனவே, 'தாழ்த்தப்பட்டோர் தலைவர்கள்' என்று கூறிக்கொள்வோர், சர்க்கார் துறையில் தங்கள் வகுப்பாருக்கு ஒரு சில அலுவல்கள் கொடுக்க வேண்டும் என்று கோருவதற்கு முக்கியத்துவம் கொடுப்பதை விடுத்து, தொழில், விவசாயத் துறைகளில் சர்க்கார் இப்போது மேற்கொண்டு வருகின்ற பல திறப்பட்ட துறைகளில் தங்களைத் தாங்களே பயன்படுத்திக் கொள்ள அவர்களை ஊக்குவிப்பதில் கவனஞ்செலுத்த வேண்டும்,"

என்று, அவர் கேட்டுக்கொண்டாராம்.

"இப்போது கவனிக்க வேண்டிய முக்கியமான பிரச்சினையெல்லாம், அபிவிருத்தித் திட்ட வேலைப்பாடுகளில் பின்தங்கிக் கிடக்கின்ற மக்களை ஈடுபடுத்த உதவி செய்வதே தவிர, ஒன்றிரண்டு சர்க்கார் வேலைகள் கொடுத்துவிடுவது அல்ல; வருகிற இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயமும், கைத்தொழிலும் அபிவிருத்தியும் செய்யப்பட இருப்பதால், அத்துறையில் அவர்களை ஈடுபடுத்தி அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது தேவை,"

என்றுங்கூட அமைச்சர் சுப்பிரமணியம் குறிப்பிட்டிருக்கிறார்.

அரபு நாடுகள் நட்பைப் பெற ரஷ்யா முயற்சி

ஆயுத விற்பனை மூலம் அரபு நாடுகளின் நட்பைப் பெறுவதற்கு ரஷ்யா தீவிரமாக முயற்சித்து வருவதாக மேற்கத்திய நாடுகள் கருத்தறிவித்திருக்கின்றனவாம்.

'ஜனநாயகத்தில் நம்பிக்கையிருந்தால் காங்கிரசார் வாக்கெடுப்பு நடத்தட்டும்'

பீகார் — வங்க இணைப்பு குறித்து இந்து மகாசபைத் தலைவர்

கல்கத்தா, மார்ச் 25—

"ஜனநாயகத்தின் அடிப்படைத் தத்துவத்தில் ஒரு சிறிது நம்பிக்கையேனும் காங்கிரஸ் தலைவர்கள் கொண்டிருப்பார்களானுல், அவர்கள் மற்றுமுள்ள எல்லாக் கட்சியினரையும் தங்கள் தங்கள் கருத்துக்களை மக்கள் முன் நிறுத்துவதற்கு அனுமதித்து, அடுத்த பொதுத் தேர்தலின்போது வாக்காளர்கள், தங்களுடைய உண்மையான முடிவை வாக்கெடுப்பின் மூலம் தெரிவிப்பதற்கு விட்டுவிட வேண்டும்,"

இவ்வாறு, பீகார்—வங்க மாநிலங்களை இரு மொழி பேசும் ஒரு மாநிலமாக இணைப்பதற்குக் காங்கிரசார் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளைக் கடுமையாக எதிர்த்து, இங்கு நடைபெற்றப் பொதுக்கூட்டம் ஒன்றில் அனைத்திந்திய இந்து மகாசபைத் தலைவர் என். ஸி. சாட்டர்ஜி பேசியிருக்கிறார்.

"தற்போது இருக்கின்ற சட்டசபைகளில் தனக்கு இருக்கின்ற பெரும்பான்மையை ஒரு புகலாகக் கொண்டு, மேற்கு வங்க—பீகார் மாநில இணைப்புப் பிரச்சினையைத் துரிதப்படுத்தும் காங்கிரசின் போக்கு சரியானதல்ல,"

என்றும், அவர் கூறியிருக்கிறார்.

'ஜனநாயக முறையில் வாக்கெடுப்பு நடத்துவதற்குப் பதிலாக, இந்தப் பிரச்சினையை வேறு எந்த விதத்திலும் தீர்த்துக்கொள்ள முனைவது கூடாது' என்றும் அவர் மேலும் கூறியிருக்கிறார்.

எஸ். ஆர். யூ. அமைப்பு கூட்டம் ஒத்திவைப்பு

"27-3-56, 31-3-56 தேதிகளில் பொன்மலையில் நடைபெறுவதாக இருந்த எஸ். ஆர். யூ. அமைப்புக் கூட்டம், பல சந்தர்ப்பக் குறைவின் காரணமாக 2-4-56 திங்கள் மாலை 5-30 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேம்"

என்று, அமைப்பாளர்கள் ஜி. பராங்குசம், சச்சுடன் அறிவிக்கின்றனர்.

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

மார்ச்	27 :	ஆலங்குளம்
	28 :	சிவகிரி
	29 :	செயங்கொண்டம்
	30 :	குடவாசல்
	31 :	திருச்சி
ஏப்.	1 :	,,
	7 :	,,

பொன்னுடை போர்த்து விழா

மதுரை வடக்காடி வீதி, திருவள்ளுவர் கழகச் சார்பில், 29—3—56 இரவு 7 மணியளவில், திரு. எம். ஏ. முத்தையா (செட்டியார்) அவர்கள் தலைமையில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து ஆராய்ச்சியாளர் திரு. டி. வி. சதாசிவப் பண்டாரத்தார் அவர்கட்குப் பொன்னுடை போர்த்துதலும், பட்டமளித்துப் பாராட்டுதலும் நடைபெறும். புலவர் பெருமக்கள் பலர் சொற்பொழிவாற்றுவர்.

சந்தானம்அய்யங்கார் ஆத்ம திருப்தி

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

"குறைபடுவோர் இதை நினைவில் வைத்துக்கொள்ளும்பட்சத்தில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பம்பாய்க்கும், இதர ராஜ்யங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளதில் உள்ள நியாயத்தைப் பாராட்டுவர். அதுவுமன்றி பாசன ஏற்பாடுகளில் முதல் திட்டத்தில் மேற்குறிப்பிட்ட மாகாணங்கள் எந்தவித நன்மையும் பெருதததையும் உணர்ந்துகொள்ள அவர்களால் முடியும்.

"வடக்கிலுள்ள பம்பாய், மற்றுமுள்ள ராஜ்யங்களுடன் பாசன வசதியில் சென்னை பெற்றுள்ள நன்மைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, சென்னை மிகுதியாகப் பெற்றுள்ளது விளங்கும். அதுவுமன்றி, இனி மேற்கொள்ளத்தக்க பாசனத் திட்டங்களே கிடையாது எனக் கூறத்தக்க நிலையில் சென்னை சலுகை பெற்றிருக்கிறது என்பது கருதத்தக்கது. சென்னைக்ளத்திய எந்த ஒரு பாசன ஏற்பாட்டையும் இதுவரை இந்திய அரசாங்கம் ஒதுக்கித் தள்ளியதே கிடையாது.

"இந்திய அரசாங்கத்தின் பண ஒதுக்கல் ஏற்பாட்டில், கைத்தறி, இதர குடிசைத் தொழில்களில் போதிய அளவு உதவி சென்னை பெற்றிருக்கிறது.

"முதற்கண் இந்தியக் குடிமகன் என்ற எண்ணத்திலும், இரண்டாம்கண் தமிழ்நாட்டின் குடிமகன் என்றக் கருத்திலும் திட்டத்தை நோக்கி, திட்டம் பற்றி ஆராய்ந்து முடிவிற்கு வர வேண்டும்.

"அதே நேரத்தில் சென்னை பின்தங்கிக் கிடக்கும் ஒரு ராஜ்யமாகத் தன்னைக் கூறிக்கொள்வது உண்மை அல்ல என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். உண்மையில் கூறப்போனல், தொழில் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் மிக மிகப் பிற்போக்கான நிலையில் விந்தியப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பிகார் போன்ற ராஜ்யங்கள் இருந்து வருகின்றன.

"தமிழ்நாடு துவங்கப்பட இருக்கிற இந்தக் கட்டத்தில், திரு-கொச்சி, மைசூர், ஆந்திரம் போன்ற அண்டை ராஜ்யங்களுடன் மொழி வகையில் பிணங்கிக் கொள்ளாமல், நட்புடன் நடந்துகொள்ள முன்வர வேண்டும்.

"இந்தி மொழி திணிக்கப்படமாட்டாது. வியாபாரிகள், தங்கள் வியாபார நலத்திற்காகவே இந்தியைக் கற்றுக்கொள்ள வேண்டும். அகில இந்திய விவகாரத்திற்காக இந்தி அவசிய மாகிறது."

—இவ்வாறு, மதுரை—இராமநாதபுரம் வியாபாரச் சங்கத்தில் பேசும்பொழுது இந்திய அரசாங்க நிதிக் குழுத் தலைவர் பொறுப்பேற்று இருக்கும் எஸ். சந்தானம் அய்யங்கார் அவர்கள் கூறியுள்ளார்.

பெல்லாரி இணைப்பு கோரி ஆந்திரர் ஆர்ப்பாட்டம்

காங்கிரஸ் தலைவர் தேபர் திக்குமுக்காடல்!

அதோனி, மார்ச் 25—

'பெல்லாரி ஆந்திரத்துடனேயே சேர்க்கப்படவேண்டும்' என்ற ஒலி முழக்கத்துடன் சுமார் 20 பேருக்கு மேற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் நேற்று மாலை ஆச்சாரியா விநோபாபாவேயின் பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு வெளிவந்த காங்கிரஸ் தலைவர் தேபரைச் சுற்றிக்கொண்டு ஆர்ப்பாட்டம் நிகழ்த்தியிருக்கின்றனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களிடையே அகப்பட்டுக்கொண்ட தேபரைப் போலீசார் மிகச் சிரமப்பட்டு அப்புறப்படுத்தினராம்!

ஆர்ப்பாட்டக்காரர்களிடம் தேபர் பேசுகையில், 'பெல்லாரி ஆந்திரத்துடன் சேர்க்கப்படவேண்டும் என்ற உங்கள் கோரிக்கையை வெளிப்படுத்துவதற்கு இது தகுந்த இடமோ, சரியான நேரமோ அல்ல' என்று கூறினதுடன், 'உங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்கும் பொறுப்பு என்னுடைய கையிலா இருக்கிறது?' என்றும் கேட்டிருக்கிறார்.

சூளை நகர இளைஞர் கழகம்

28—3—56 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு டாக்டர் ஏ. பட்டாபி அவர்கள் 'தொத்து வியாதிகள்' என்னும் பொருள் பற்றி சூளை, மாணிக்கச் செட்டித் தெருவிலுள்ள மேற்படி கழக மனையில் சொற்பொழிவாற்றுவார்.

சென்னை நகர சபை லாரி டிரைவர்கள்

வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு விட்டனர்

சென்னை, மார்ச் 27—

இன்று மேற்கொள்வதென முடிவு செய்திருந்த வேலை நிறுத்தத்தை சென்னை நகர சபை லாரி டிரைவர்கள் கைவிட்டு விட்டனர் என்றும், தங்களுடைய இந்த முடிவை லேபர் யூனியன் அதிபர்கள் மூலம் சென்னை அரசாங்க உள்ளாட்சி இலாகாவிற்கு அனுப்பிவைத்திருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை நகரசபைக்கு அனுப்பியிருந்த கடிதத்தில், "வாராந்திர விடுமுறை, இரண்டாந்தர டிரைவர்களை வேலையினின்றும் நீக்கி விடுவது போன்ற ஒரு சில பிரச்சினைகளைத் தவிர மற்றுமுள்ள பெரும்பான்மையான பிரச்சினைகளில் பொதுப்படையான ஒருமைப்பாடு ஏற்பட்டுள்ளதால், சங்கம், தனது வேலைநிறுத்த முடிவைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, இந்தக் கடிதம், வேலை நிறுத்தத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும் அடையாளக் கடிதமாகப் பாவித்துக் கொள்ளவும்," என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இதனிடையில், ஒரு வேளை வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டாலும்கூட, நகரசபைவாசிகள் அனைத்தும் வேலை செய்வதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் நகரசபைக் 'கமிஷனர்' முன்னெச்சரிக்கையாக மேற்கொண்டிருந்திருக்கிறார்.

மேலும், பாதுகாப்புக்கான வாகனங்கள், மற்றும் லாரிகள் அனைத்தையும் ஓட்டுவதற்குத் தாங்கள் முன்வருவதாகத் தெரிவித்திருந்த 37 நகரசபை அதிகாரிகளுக்கும் அத்தகு வாகனங்களை ஓட்டுவதற்கான லைசென்ஸ் சர்டிபிக்கேட்டுக்கள்கூட கொடுக்கப்பட்டிருந்தனவாம்.

ஆந்திர மாநிலத்திற்கு மத்திய நிதி அமைச்சர் எச்சரிக்கையாம்!

திட்டங்களுக்கு மதிப்பு அளிக்க இயலாதாம்!

முதலமைச்சர் கோபாலர் தரும் தகவல்

கர்னூல், மார்ச் 26—

"ஆந்திர மாநிலத்தின் பொருளாதார நிலை கஷ்டமாக இருக்கிறது; இதனிடையில் மத்திய நிதி அமைச்சர் சி. டி. தேஷ்முக், இனிமேல் ஆந்திர மாநிலத்தின் மசோதாக்கள் தற்போதுள்ள ரிசர்வ் பாங்கியின் நிதி நிலைமைக்கும் அதிகமான அளவில் இருக்குமானல், அவற்றிற்கு மதிப்பளிக்க இயலாது என்று வேறு எச்சரிக்கையும் விடுத்திருக்கிறர்; இப்படிப்பட்ட நிலையில், ஆந்திர மாநில அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றி வைப்பதில் இனிமேல் மத்திய சர்க்காரின் உதவியையே முக்கியமாக எதிர்பார்த்துக்கொண்டிருப்பது முடியாது,"

என்று, ஆந்திர மாநில சட்டசபையில், முதலமைச்சர் பி. கோபால ரெட்டி தெரிவித்திருக்கிறர்.

"கடந்த இரண்டு ஆண்டுகளில், மாநிலத்தின் நிலவரியில் ரூ 11 கோடிக்குப் பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிறது. இது மட்டுமல்லாமல் ஆந்திர மாநிலம் உருவாக்கப்பட்ட அந்த நேரத்தில் இணைக்கப்பட்டுக் கிடந்த சென்னை மாநிலத்திடமிருந்து கடனாக ரூ 30 கோடி வாங்கப்பட்டது. தற்போது மேற்கொண்டு — அதாவது, ஆந்திர மாநிலம் தனி மாநிலமாக உருவாக்கப்பட்ட நாள் முதற்கொண்டு இதுவரைக்கும் ரூ. 40 கோடி கடன் வாங்கியிருப்பதால், ஏற்கனவே இருந்தக் கடன் தொகையான ரூ. 30 கோடியை ரூ. 70 கோடியாக உயர்த்திவிட்டது எனவே, நமது பொருளாதார நிலையை உயர்த்திக்கொள்ள மேலும் புது வரிகள் விதிப்பது சாத்தியமா என்பது குறித்து ஆலோசிக்கவேண்டியதாக இருக்கிறது," என்றும் அவர் தெரிவித்திருக்கிறர்.

மேலும் அவர் பேசுகையில், மாநிலத்தின் தண்ணீர் அபிவிருத்தித் திட்டங்களை முழுமையாக நிறைவேற்றிவைக்க சுமார் ரூ. 350 கோடியாகிலும் தேவைப்படும் அதுடன் போக்கு வரத்துச்சாலைகளின் பாழடைந்த நிலை, மருத்துவமனைகளில் மருந்துகள் போதாக் குறைபாடு, மாநிலத்தில் தண்ணீர் விநியோகக் குறைபாடு போன்ற பிரச்சினைகளையும் மாநில சர்க்காரே ஏற்று நடத்தியுள்ளது. இவைகளில் 90-க்கு மேற்பட்ட சதவிகித வேலைகள், சர்க்காரிடம் தேவையான பணவசதி இல்லாத காரணத்தினல் நல்ல முறையில் செய்யப்படவில்லை. எனவேதான் இத்தகு நிலைமைகளை எல்லாம் சீர் செய்து முடிக்க மேலும் பணவசதியைப் பெருக்கிக்கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது. இவற்றிற்கெல்லாம் மேலாக, இவ்வளவு கஷ்டநஷ்டத்தினூடேயும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தையும் வெற்றிகரமாக்கிக் காட்ட வேண்டியதாகவும் இருக்கிறது," என்றும் குறிப்பிட்டிருக்கிறர்.

84 இலட்சம் அகதிகள்

இந்தியா வந்துள்ளனராம்

புதுடில்லி, மார்ச் 26—

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து மேற்கு வங்கத்திற்கு அகதிகளாய் வருவோரின் எண்ணிக்கை, நாள் ஒன்றுக்கு சுமார் 2,000 பேர் வீதம் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1955 டிசம்பர் திங்களோடு முடிவடையும் 12 மாதங்களில் கிழக்கு பாகிஸ்தானிலிருந்து சுமார் 2,40,000 பேர் இந்தியாவுக்கு வெளியேறி வந்திருக்கிறர்களாம்!

36,70,000 பேர் இதுவரை கிழக்கு பாகிஸ்தானிலிருந்தும், 47 20,000 பேர் மேற்கு பாகிஸ்தானிலிருந்தும் ஆகமொத்தம் 83,90 000 பேர் வெளியேறி வந்துள்ளனராம்.

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வந்தோரில் 28 இலட்சத்திற்கு அதிகமானோர் மேற்கு வங்காளத்திலேயே குடியமர்த்தப்பட்டிருக்கிறர்களாம்.

அபராதம் கட்ட மறுத்து..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு தோழர்கள்மீது அபராதம் விதிக்கப்பட்டது. அபராதம் செலுத்த மறுத்ததின்பேரில் மூன்று நாள் சிறைத் தண்டனை பெற்று, 24—3—56-ல் விடுதலை செய்யப்பட்டனர்.

சிறை சென்ற தோழர்கள்:— கை. ஆறுமுகம், எஸ் கந்தசாமி, அ. வாசு, ச. பெருமாள், எஸ். இராசு, என். அரங்கசாமி, எம் பிச்சை, எஸ். வைத்திலிங்கம், வி. என். அரங்கசாமி, ஏ. குமாரசாமி, வி. அரங்கசாமி, க. சிங்காரம், ஆர். கோவிந்தன், எஸ் பூவான், கே. இராமசாமி, மு பொன்னுசாமி, முஸ்தபா, டி. கதிர்வேல், வை. அண்ணாமலை, ஏ. எஸ் இராசு, ரசீதரன், புரவி, பி எஸ் கந்தன், எம். வீரன், டி. சோமு, செங்கோடன், ச. கருப்பண்ணன், சு. இராசு, சி. மாணிக்கம், சி. ஆறுமுகம், க. காத்தான், ப. கிருட்டினன், இரா. பெரியண்ணன், மு. குமார், ச. ஆறுமுகம், ரெ முத்துரங்கன், எம். இராமசாமி, ம. பெருமாள், கோ. சி. வீரமுத்து, இரா. சுந்தரேசன், மச. கோவிந்தன், அ. வரதராசு, ரா. கிருட்டிணன், கி இராமசாமி, ரா. பெருமாள், எஸ். என். நடேசன், ஆர். எம். எல். கோபால கிருட்டிணன், முத்து, ஆர். கணேசன், எஸ் ஆர். நடராசன், எஸ். என். ராசு, எஸ் எம். பி. மணியன், சோ. அ. தணிகாசலம், எஸ். டி. ஆறுமுகம், எஸ். மாணிக்கம், அ. முத்துசாமி, எஸ். டி சீனிவாசன், அ. ராமசாமி, இலக்குமணன், முத்துசாமி, து. மருதமுத்து, பெ. சின்னசாமி, பா. வேணுகோபால், வெ. சேவகன், இராசலிங்கம், எஸ். ஆர். கிருட்டிணமூர்த்தி.

ரூ. 20 கோடி செலவில்!

நகரசுத்தித் தொழிலாளருக்குக் குடியிருப்பு வசதிகளாம்!

புதுடில்லி, மார்ச் 26—

சேரி ஒழிப்பு, நகரசுத்தித் தொழிலாளருக்குக் குடியிருப்பு வசதி ஆகியவற்றுக்காக 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 20 கோடி ஒதுக்கப்படுமாம்.

2-வது ஐந்தாண்டு திட்ட முடிவுக்குள் சில பெரிய நகரங்களில் சில மோசமான சேரிகளாவது சீர்திருத்தப்பட்டுவிடும் என்று நம்பப்படுகிறதாம்.

சில 'மாடல் வீடுகள்' கட்ட ரூ 5 கோடியும், தோட்டத் தொழிலாளருக்கு குடியிருப்பு வசதிக்காக ரூ 2 கோடியும் ஒதுக்கப்படுமாம்.

இவ்வருடம் ஜனவரித் திங்கள் வரை சுமார் 79,000 வீடுகள் கட்ட அனுமதிக்கப்பட்டதாம். இதற்குக்கடனாக ரூ. 11,42,20,000 மும், மானியமாக ரூ.10,56,30,000 மும் வழங்கப்பட்டுள்ளதாம். ஏற்கனவே சுமார் 35,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டனவாம்.

குறைந்த வருமானக்காரருக்கு வீடு கட்டித்தரும் திட்டமும் முன்னேற்றமடைந்துள்ளதாம்.

நடுத்தர வருமானக்காரர்களுக்கு வீடுகள் கட்ட 'இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி'களின் ஒத்துழைப்புடன் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறதாம். அடுத்த சில மாதங்களின் இறுதித் திட்டம் அறிவிக்கப்படலாமாம்.

'பூதான்'—ஆங்கில வார இதழ்

அதோனி, மார்ச் 25—

'பூமி கிராந்தி' தினமான வருகிற ஏப்ரல் 18-ந் தேதியிலிருந்து, புனேயையடுத்த சனிவாரப் பேட்டை எனுமிடத்திலிருந்து, 'பூதான்' எனும் ஆங்கில வாரப் பதிப்பு ஒன்று வெளியிடப் பெறும் என்று அகில இந்திய சாவ சேவா சங்கத்தின் கூட்டுச் செயலாளரான சித்தராஜ் ததா என்பார் தெரிவித்திருக்கிறர்.

மருத்துவமனைத் தொழிலாளர் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

கோரிக்கைகளைப் பரிசீலனை செய்ய சர்க்கார் ஒப்புதல்

சென்னை, மார்ச் 26—

சென்னை மருத்துவமனைத் தொழிலாளர்கள் இன்று ஒரு கண்டன வேலை நிறுத்தம் செய்வதென முடிவு செய்திருந்தனர். ஆனல், மேற்படி சங்கம் விடுத்திருந்த கோரிக்கைகளைப் பரிசீலனைக்கு சர்க்கார் எடுத்துக்கொண்டிருப்பதையொட்டி, வேலை நிறுத்தத்தை நிறுத்திவிடுவதென முடிவு செய்துவிட்டதாக சங்கத்தின் பொதுச்செயலாளர் அறிவிப்பு விடுத்திருக்கிறர்.

தொழிலாளர்கள் அனைவரும் வழக்கம்போல் வேலைக்குச் செல்ல வேண்டுமென்றும், ஆட்சேப 'பாட்ஜு'களை அகற்றிவிட வேண்டுமென்றும் தொழிலாளர்களை அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.